www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

தூஹ- பத'' - தத்தவின் பாத்திரம், இதன் காலம் கி.மு. நூற்றாண்டு என்று எழுத்தின் அடிப்படையில் கூறலாம். கந்தரோடையில் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சிகளின் மூலம் கிடைத்த பௌத்த சின்னங்கள், இப்பகுதியில் பௌத்த மக்கள் நிலைகொண்டிருப்பதைச் சுட்டுகின்றன.

எனவே, தென்னிலங்கை ஆட்சியாளர் கதிரைமலையைக் கைப்பற்றியதும் அப்பிரதேசத்தில் வாழ்ந்தோரில் ஒரு பகுதியினர் தொண்டமானாற்றைக் கடந்துவல்லிபுரப் பகுதியில் ஏற்கனவே குடியிருந்தோருடன் இவர்களும் சேர்ந்து குடியேறிக்கொண்டனர். வல்லிபுரப் பகுதியிலும் அவர்களால், அமைதியாக தொடர்ந்து வாழ முடியவில்லை. கி.பி.1 ம் நூற்றாண்டில் அனுராதபுரத்திலிருந்து சிங்கள இராச்சியத்தை ஆண்ட வசப என்ற மன்னன் வல்லிபுரப் பிரதேசத்தை வெற்றி கொண்டு தன் அமைச்சன் ஒருவனை அப்பகுதியை நிர்வகிக்க நியமித்தான்.

வல்லிபுரத்திலிருந்து கி.பி.முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பொற்சாசனம் கிடைத்துள்ளது. இச்சாசனம் பல வகையாலும் முக்கியத்துவம் வாய்ந்தது. கி.பி.முதலாம் இரண்டாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணப் பகுதி நாகதீவு எனப் பெயர் பெற்றிருந்ததையும் அக்காலத்தில் அனுராதபுரத்திலிருந்து சிங்கள இராச்சியத்தை ஆண்ட வசப மன்னனுடைய (கி.பி. 67 - 111) ஆதிக்கத்திற்கு உட்பட்டு மன்னனின் அமைச்சன் இசிகிரயன் என்பவனால் அது நிர்வகிக்கப்பட்டது என்பதையும் வல்லிபுரப் பிரதேசத்தில் பௌத்தம் பரவியிருந்தது என்பதனையும் இச்சாசனம் அறிவிக்கின்றது. கந்தரோடையிலும் வல்லிபுரப் பகுதியிலும் தொல்லியலாய்வின் பேறாகக் கிடைத்த சாசனங்கள் இப்பகுதிகளில் பௌத்தம் நிலை பெற்றிருந்தது என்பதனை நிறுவுகின்றன. தமிழ்நாட்டில் பௌத்தம் பரவியா காலவேளையில் வடவிலங்கைத் தமிழர் பலரும் பௌத்தத்தை தழுவியிருப்பர். இத்திராவிடத் தமிழ்ப் பௌத்தர்கள் காலகதியில் தமது முந்தைய சமயத்திற்கு மாறியிருப்பர்அல்லது இவ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்திருப்பர் என ஊகிக்க முடியும். எனவே கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலும் கி.பி. 1 ஆம் நூற்றாண்டிலும் வடவிலங்கையில் பெரும்பாலும் சிங்கள மன்னர்களது ஆதிக்கம் நிலவியது. அக்கால வேளையில் நாகதீவின் ஊர்ப்பெயர்கள் பலவும் சிங்களப் பெயர்களாகின. கொக்குவில், கோண்டாவில், மிருசுவில் என்பன இத்தகையன. சிங்கள ஆட்சியாளரின் கீழ் வடவிலங்கை கி.பி. 8 ஆம் நூற்றாண்டு வரை அடிக்கடி உட்பட்டது. இடையிடையே தமிழ் மன்னர்களின் ஆதிக்கத்தினுள்ளும் அமைந்திருந்தது.



கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் (கி.மு. 259 - 210 வரை) அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த தேவநம்பிய திஸ்ஸ மன்னன் நாகதீவு உட்பட உத்தரதேசத்தை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டிருந்தான். அக்காலத்தில் அனுராதபுர இராச்சியத்தவர் கிழக்கிந்தியாவுக்குச் செல்வதற்குப் பயன்படுத்திய பிரதான துறைமுகமாக யாழ்ப்பாணத்து ஜம்புக்கோளத்துறை (தற்காலத்துச் சம்புத்துறை என அடையாளம் காண இடமுண்டு) இடம் பெற்றது. இங்கு தான் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் சங்கமித்தா தேரியை வரவேற்றான் என்றும் அவனால் இங்கு ஸமுத்த - பண்ண - ஸாலா என்ற மண்டபமும் ஜம்புக் கோலா விகாரையும் கட்டுவிக்கப்பட்டன என்றும் அறிகின்றோம். கி.பி. 1 ஆம் நூற்றாண்டில் உத்தரதேசத்தை வஸப என்ற சிங்கள மன்னன் தன் ஆட்சியின் கீழ் கொண்டிருந்தான். கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் உத்தரதேசம் மஹல்லலகநாக, கனிஷ்ட திஸ்ஸ ஆகிய சிங்கள மன்னர்களாலும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் வொஹாரிகதிஸ்ஸ என்ற சிங்கள மன்னனாலும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் 2 ம் அக்கபோதி சிலாமேகவண்ண ஆகிய சிங்கள மன்னர்களாலும் நிருவகிக்கப்பட்டது.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலே ஸாலிப்பத விஹாரை என்னும் பௌத்த நிறுவனத்தை மஹல்லகநாக (136 - 143) என்ற அனுராதபுரத்து மன்னன் கட்டுவித்தான் என்றும் அதே நூற்றாண்டில் அனுராதபுரத்திலிருந்து ஆண்ட இன்னொரு மன்னனாகிய கனிஷ்ட திஸ்ஸ (167 - 186) யாழ்ப்பாணத்தில் ஒரு கோயிலைத் திருத்தியமைத்தான் என்றும் 3 ஆம் நூற்றாண்டிலே வொஹரிக திஸ்ஸ (209 - 231) என்ற அனுராதபுரத்து மன்னன் யாழ்ப்பாணத்திலிருந்து திஸ்ஸ விகாரையைச் சுற்றி மதிலமைப்பித்தான் எனவும் அறிகின்றோம். இதற்குப் பிற்பட்ட காலத்திலே 2 ஆம் அக்கபோதி (604 - 614) என்ற அனுராதபுரத்து மன்னன் யாழ்ப்பாணத்திலிருந்த உண்ண லோமகாக் கோயில் என்ற நிறுவனத்தை ராஜாயதனதாது என்ற விகாரைக்கு கட்டிக் கொடுத்தான் எனவும் அங்கிருந்த அமலதேசிய என்ற சைத்தியத்துக்கு ஒரு குடையைத் தானமாக அளித்தான் எனவும் சூளவம்சத்தின் மூலம் அறிவதாக கா. இந்திரபாலா என்ற வரலாற்று அறிஞர் கூறுகிறார். ஸிலாமகே வண்ண மன்னன் (619 - 628) அனுராதபுரத்திலிருந்து ஆட்சி நடத்தியபோது யாழ்ப்பாணத்தையும் உள்ளடக்கிய பழைய மாவட்டமாகிய உத்தரதேசத்தை கிரிநாதன் என்பான் கைப்பற்ற முயற்சித்தான் எனவும் கிரிநாதனை ஸிலாமேக வண்ணன் உடனே அடக்கி மீண்டும் உத்தரதேசத்தை தன் ஆணைக்குட்படுத்திக் கொண்டான் என்றும் மேலும் சூளவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. இந்நூலின் கூற்றின்படி உத்தரதேசத்தில் மீண்டும் ஒருமுறை அனுராதபுர மன்னனுக்கு எதிராக கிளர்ச்சி தோன்றியது. அப்போது 2 ஆம் மகிந்த மன்னனுக்கு (777 - 797 ) எதிராக உத்தரதேசத்து முதலிகள் கிளர்ச்சி செய்தனர்.

### உக்கிர சிங்கன்

சிங்கள ஆட்சியாளனுக்கு எதிராகக் கிளர்ந்த இக்கிளர்ச்சிக்கு தலைமை வகித்தவன் கலிங்கதேசத்தவனாக மணற்றியில் குடியேறியிருந்த உக்கிரசிங்கன் என்ற தலைவனாவான் எனத் துணியலாம்.

-செங்கை ஆழியான்-

நெடுங்காலம் இழந்திருந்த உரிமையை மீட்கும் வகையில் போரிட்டு நாகதீபத்தை உக்கிரசிங்கன் பெற்றுக் கொண்டான். இது நிகழ்ந்தது கி.பி. 785 இல் ஆகும். வெற்றி கொண்ட உக்கிரசிங்கன், கதிரைமலை (கந்தரோடை) யினைத் தலைநகராமாகக் கொண்டு உத்தரதேசத்தை ஆண்டு வந்தான். யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாக உக்கிரசிங்கனையே அறியக் கிடக்கின்றது. உக்கிர சிங்கன் கதிரமலையில் ஆட்சி செய்த காலத்தில் சோழ, இளவரசியாகிய மாருதப்புரவீகவல்லி என்பாள் தீர்த்தயாத்திரை மேற்கொண்டு கீரிமலைக்கு வந்தாள். அவளை வலிந்து சிறை கொண்டு உக்கிர சிங்கன் மணந்து கொண்டான். அவளின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து மாவிட்டபுரத்தில் கந்தனுக்கு ஆலயம் சமைப்பித்தான். இந்தியாவிலிருந்து அக்கோயிலுக்குரிய விக்கிரகங்களையும் பெரிய மனத்துளார் என்ற பிராமணோத்தரையும் வரவழைத்தான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறும். உக்கிரசிங்கன் தலைநகராக விருந்த கதிரமலையைவிட்டு சிங்கை நகருக்குத் தனது தலைநகரை மாற்றிக்கொண்டான்.

### ஏன் தலைநகர் மாறியது?

கந்தரோடை (கதிரமலை) யைவிட்டுத் தனது தலைநகரைச் சிங்கை நகருக்கு மாற்றியதற்கான காரணங்கள் தெளிவானவை. கந்தரோடைப் பிரதேசம் பௌத்த மத மக்களது முக்கிய பிரதேசம் பௌத்த மத மக்களது முக்கிய பிரதேசமாக மாறியிருந்தது. அத்துடன் சங்கமித்தை தேவியின் வருகையின் பின்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த பௌத்த யாத்திரிகர்கள் ஜம்புக்கோள பட்டின(திருவடி நிலை) மூடாக வந்திறங்கினர். ஜம்புக்கோளபட்டினத்தில் விகாரையொன்றும் கட்டப்பட்டிருந்தது. இதனை விட ஸாலிப்பத விகாரை, திஸ்ஸவிகாரை என்பனவும் நாகதீவில் அமைந்திருந்தன. கந்தரோடையோடு வல்லிபுரத்திலும் பௌத்த மத மக்கள் பரவியிருந்தனர். பௌத்தம் நாகதீபப் பிரதேசத்தில் பரவியிருந்த ஒரு காலகட்டத்தில் சிங்கள ஆட்சியாளரின் ஆதிக்கத்திலிருந்து உக்கிர சிங்கன் விடுவித்திருந்தான். தீவிரசைவனாக இவன் விளங்கியுள்ளான் என்பதை இவன் ஆற்றிய திருப்பணிகள் நிரூபிக்கின்றன. கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் இவனால் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இவனது மனைவியான மாருதப்புரவீகவல்லி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்தாள். யாழ்ப்பாண இராச்சியத்தில் சைவம் இழிவு நிலையில் இருப்பதைக் கண்டு புத்தூக்கம் அளிக்க விரும்பி காசிப்பிராமணர்கள், பெரியமனத்துளார் என்ற அந்தணர் என்பவர்களை வருவித்துக் குடியிருத்தியுள்ளான். இந்தியாவிலிருந்து சிலா விக்கிரங்கள் எடுத்து வரப்பட்டு இந்துக்கோவில்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. இவ்வர்று உக்கிரசிங்கன் பல்வேறு முயற்சிகள் செய்தும் பௌத்தத்தினது செல்வாக்கு, கதிரைமலை, வல்லிபுரப் பகுதிகளில் நிலை கொண்டிருந்தது. அதாவது நாகதீபத்தின் மேற்குப் பகுதி,

(31 ம் பக்கத் தொடர்ச்சி)

லொசான் மாநகரில்
EURO LANKA
Rue du Simplon 12, 1006 Lausanne, SWITZERLAND
Tel: 077/ 23 20 13
வாரம் தோறும் சகலவிதமான கடலுணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள் (நேரடி இறக்குமதி) மற்றும் இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்: மாத-வார பத்திரிகைகள், சஞ்சிகைகள், புதிய-பழைய திரைப்படங்கள், ஓடியோ கசற், சீடிகள் அனைத்தும் மலிவு விலையில்!

G
தெ
வி
50 Units
100 Unit
200 Unit
உங்கள் உற
Tel: 077/ 2
Fax: 021/

### ஈழத்தவர் வரலாறு.....

(27ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்குப் பகுதி என்பன வேற்று மத ஆதிக்கத்திலிருக்க தென்பகுது (யாழ்ப்பாணம்), மக்கள் விரும்பிக் குடியேறியிராத பிரதேசமாதக விளங்கியது. இத்தகு நிலையில் தனது தலைநகரை இடம் மாற்றுவதற்கு உக்கிரசிங்கன் விரும்பினான். இதனையே முதலியார் செ. இராசநாயகம், உக்கிரசிங்கன் சிவ வழிபாடுடையவனானபடியால் புத்த பள்ளிகள் நிறைந்த கதிரமலையிலும் சிங்கை நகரே சிறந்ததென நினைத்தான் போலும் என்கிறார். சைவம் சிறப்புறக்கூடிய புதியதொரு பிரதேசத்தை அவன் தெரிவு செய்யவிரும்பினமையின் விளைவே சிங்கைநகர் புதிய தலைநகராக மாறியது.

படிப்பகம்